# ஆகஸ்ட்– 02 – புதன்

### புனித யூலியன் எமார்ட
### நம் கடவுளாகிய ஆண்டவரைப் பெருமைப்படுத்துங்கள்: திபா. 99:5

## முதல் வாசகம்: விடுதலைப் பயணம்: 34 : 29– 35

மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கிச் செல்கையில், உடன்படிக்கைப் பலகைகள் இரண்டையும் தம் கைகளில் தாங்கிக் கொண்டிருந்தார். மோசே கடவுளோடு பேசியதால் அவர் முகத்தோற்றம் ஒளிமயமாய் இருந்தது. ஆனால் மோசே அதை அறியவில்லை.ஆரோனும் இஸ்ரயேல் மக்கள் அனைவரும் மோசேயைப் பார்த்தபோது, அவர் முகத்தோற்றம் ஒளிமயமாய் இருந்ததைக் கண்டு அவரை அணுகிச் செல்ல அஞ்சினர்.ஆனால் மோசே அவர்களைக் கூப்பிட்டார். ஆரோனும் மக்கள்கூட்டமைப்பின் தலைவர்கள் அனைவரும் அவரை நோக்கி வந்தனர். மோசேயும் அவர்களிடம் பேசினார்.பின்னர் இஸ்ரயேல் மக்கள் அனைவரும் அவர் அருகில் வந்தனர். அப்போது, ஆண்டவர் சீனாய் மலையில் தமக்கு அறிவித்த அனைத்தையும் அவர் அவர்களுக்குக் கட்டளையாகக் கொடுத்தார்.மோசே அவர்களோடு பேசி முடித்தபின், தம் முகத்தின் மேல் ஒருமுக்காடு போட்டுக்கொண்டார். மோசே ஆண்டவரோடு உரையாடும்படி அவர் திருமுன் செல்வதுமுதல் வெளியே வருவதுவரை முக்காட்டை எடுத்து விடுவார். அங்கிருந்து வெளியே வந்து, அவருக்குக் கட்டளையிடப்பட்டவற்றை அவர் இஸ்ரயேல் மக்களுக்கு எடுத்துக் கூறுவார். இஸ்ரயேல் மக்கள் மோசேயின் முகத்தைப் பார்க்கும்போது, மோசேயின் முகத்தோற்றம் ஒளிமயமாயிருக்கும். மோசே ஆண்டவரோடு பேச் செல்லும்வரை தம் முகத்தின் மேல் மீண்டும் முக்காடு போட்டுக் கொள்வார்.

**பதில்பாடல்:** நம் கடவுளாகிய ஆண்டவர் தூயவர்

## நற்செய்தி : மத்தேயு 13 : 44 - 46

அக்காலத்தில் இயேசு மக்களை நோக்கிக் கூறியதாவது:"ஒருவர் நிலத்தில் மறைந்திருந்த புதையல் ஒன்றைக் கண்டுபிடிக்கிறார். அவர் அதை மூடி மறைத்துவிட்டு மகிழ்ச்சியுடன் போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அந்த நிலத்தை வாங்கிக்கொள்கிறார். விண்ணரசு இப்புதையலுக்கு ஒப்பாகும்." வணிகர் ஒருவர் நல்முத்துகளைத் தேடிச் செல்கிறார். விலை உயர்ந்த ஒரு முத்தைக் கண்டவுடன் அவர் போய்த் தமக்குள் யாவற்றையும் விற்று அதை வாங்கிக்கொள்கிறார். விண்ணரசு அந்நிகழ்ச்சிக்கு ஒப்பாகும்" என்றார்.

**தியானம்:** இன்று மனிதர்கள் அற்புதங்கள் அதிசயங்களைத் தேடி அலைந்து அதைப்பார்க்க ஓடிக் கொண்டிருக்கிறார்கள். மாதா திருத்தலங்கள், அவர்களுடைய காட்சிகள் மேலும் பல்வேறு திருத்தலங்களுக்கு பாதயாத்திரைகள், பயணங்கள் என்று இறைவனுடைய ஆற்றலை அனுபவிக்க கோயில் கோயிலாக அலைந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்த உலகத்தில் அளப்பெரிய ஆற்றலை வழங்கக்கூடிய இறைவனுடைய பிரசன்னத்தை, அவர் நம்மோடு நம்மிலே வாழுகின்ற ஆற்றலை உணர நாம் மறந்துவிடுகின்றோம். மோசே கடவுளோடு பேசியதால் அவர் முகத்தோற்றம் ஒளிமயமாய் இருந்தது என்று இன்றைய முதல் வாசகத்திலே நாம் வாசிக்கின்றோம். கடவுளோடு பேசியதால் அவருடைய முகம் பிரகாசித்தது என்றால் நம்முடைய முகங்கள் இருளடைந்து சோகமாக எதையோ இழந்தவர்கள்போல காணப்படுவது எதற்காக? நாம் இறைவனோடு பேசுகின்றோமா? அல்லது அவருடைய உண்மையான உயிர்ப்பின் பிரசன்னத்தை அனுபவிக்கின்றோமா? இன்று ஆண்டவருடைய பிரசன்னத்தை நற்கருணை பெட்டியிலும், ஆலயத்திலும் மட்டுமே கண்டு, ஆலய ஆன்மீக காரியங்களோடு நாம் கடவுளோடு கொண்ட உறவை நிறுத்திக் கொள்கின்றோம். கடவுளை எல்லாவற்றையும் கடந்து நிற்பவராக மட்டுமே பார்த்துப் பழகிப்போன நாம் அவர் 'கட' 'வுள்'' கடந்து உள் உறைபவர் என்பதை மறந்துவிடுகின்றோம். கடவுள் நமக்குள் பிரசன்னமாயிருக்கின்றார் என்ற உண்மையை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. நானும் தந்தையும் ஒன்றே. என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும். என்னுள் இருந்து செயலாற்றுபவர் தந்தையே. (யோவா.14:9,10) என்ற இயேசுவின் வார்த்தைகளும், இனி வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார் கலா.2:20) என்ற பவுலடியாரின் வார்த்தைகளும் நமக்குள் இருக்கும் இறைவனின் பிரசன்னத்தை ஆழமாக உணர்த்துகின்றது. மேலும் "நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடிகொண்டிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா?" (1கொரி.3:16,6:9) என்ற இறைவார்த்தை நம்மிலே அழுத்தமாக சொல்லக்கூடிய உண்மை, நாமெல்லாம் நடமாடும் ஆலயங்கள் நம்மிலேதான் இறைவன் உறைந்திருக்கின்றார். இந்த ஒப்பற்ற உண்மைதான் இன்றைய நற்செய்திவாசகத்தில் நாம் வாசிக்கும் புதையல் மற்றும் முத்து உவமை. நம்மிலே வாழுகின்ற ஒப்பற்ற செல்வமான கிறிஸ்துவை கண்டு அவரோடு எப்போதும் உறவாடிக்கொண்டே இருக்க வேண்டும். "உண்மையில் என்னைப்பொறுத்த மட்டில் என் ஆண்டவராம் இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். இதன் பொருட்டு மற்ற எல்லாவற்றையும் இழப்பாகக் கருதுகின்றேன்….. கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகின்றேன்"(பிலி.3:8). எனவே கிறிஸ்துவை ஆதாயமாக்கி இறைபிரசன்னத்தில் எங்களை நிரப்பி ஒளிவீசுகின்ற இறைவனின் பிரசன்னங்களாக வாழுவோம்.